**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I COURT, NAMAKKAL.**
**CC . No. 480/2025**
**PW - 5**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.ரவிக்குமார் ( LW. 12 ) |
| Father's / Husband Name | : | த/பெ.செங்கோடன் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **04.07.2026** தேதியில் திரு.துரைகருணாநிதி, உதவியாளர் ஆகிய என்னால் சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**(எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டுள்ளது.)**

**முதல் விசாரணை:–**

1) நான் தற்போது நல்லிபாளையம் காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 21.12.2024 ம் தேதி 22.00 மணிக்கு நான் நிலைய அலுவலில் இருந்த போது ராணி க/பெ.ராஜீ என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரின் பேரில் நிலைய குற்ற எண்.237/2024 சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNSஆக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை மற்றும் அசல் புகார் மனுவையும் இணைத்து கனம் நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

2) மேல் விசாரணைக்காக வழக்கின் கோப்புகளை காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். காவல் ஆய்வாளர் திரு. யுவராஜ் என்பவரின் கையெழுத்தும், கையொப்பமும் நன்கு பரிச்சியம் என்பதால் ஆவணங்கள் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். சம்பவயிடமான நல்லிபாளையம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட

வள்ளிபுரம் குமரன் டவர்ஸ் எதிரே கடந்த 22.12.2024 ம் தேதி காலை 07.00 மணிக்கு சாட்சிகள் செந்தில்குமார், பெரியசாமி முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து மேற்படி சாட்சிகளை தனிதனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ. 4 மற்றும் மாதிரிவரைபடம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

3) இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட வாதி ராணி, பூபதி, புவனேஷ்வரி, பூவிழி, முருகேசன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அன்றைய தினமே எதிரி கைது செய்து தக்க இருநபர் ஜாமினில் விடுவிக்கப்பட்டது. பிரேதத்தின் மீது 22.12.2022 ம் தேதி காலை 10.00 – 12.00 மணிவரை பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். மேற்படி சாட்சிகளான பூபதி, புவனேஷ்வரி, பூவிழி, முருகேசன், ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார். **அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு. பிரகாஷ் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ. 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. இவ்வழக்கில் சமம்பந்தமப்பட்ட 26.12.2024 ம் தேதி விபத்தில் சம்பந்தப்பட்ட TN 57 BL 0196 LMV Car யை மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் அவர்கள் வசம் ஒப்படைத்து, மேற்படி வாகனத்தின் பரிசோதனையின் பிறது சான்று பெற்றுள்ளார். பின்னர் விபத்தில் இறந்து போன நபர் ஓட்டி வந்த TN 28 AC 2502 TVS XL Super வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் சக்திவேல் அவர்கள் வசம் ஒப்படைத்து, மேற்படி வாகனத்தின் பரிசோதனையின் பிறது சான்று பெற்றுள்ளார். **மேற்படி இரண்டு மோட்டார் வாகனங்களின் வாகன ஆய்வறிக்கை முறையே அ.சா.ஆ. 8 மற்றும் 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. மேலும் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து மேற்சொன்ன பிரிவின் கீழ் கடந்த 28.12.2024 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –**

**5)** இவ்வழக்கில் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சிகள் இல்லை என்றால் சரி. பொய் புகார் பெற்று, அதற்கு ஏற்றாற்போல் பொய் வழக்கு புனையப்பட்டுள்ளது என்றும், சம்பவயிடத்திற்கு போலிசார் யாரும் செல்லவில்லை என்றும், எதிரியின் கவனக்குறைவால் விபத்து ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் கூற தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டி சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக சாட்சி கைரேகை/கையொப்பம் செய்தார்.

ஒம்/–S.தினேஷ்குமார்,
நீதித்துறை நடுவர் எண்.1
நாமக்கல்.